முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி நேற்று (26.01.2026) எழும்பூர் சட்டமன்றத் தொகுதி, சேத்துப்பட்டு, ஹாரிங்டன் சாலையில் சிஎம்டிஏ சார்பில் கட்டப்பட்டுவரும் சமூக நலக்கூடத்தின் பணிகளை துரிதபடுத்தும் வகையில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு நேரில் சென்று ஆய்வு செய்து, பணிகளை விரைந்து முடித்திட அலுவலர்கள் மற்றும் ஒப்பந்ததாரரை அறிவுறுத்தினார். இந்த ஆய்வின்போது சிஎம்டிஏ உறுப்பினர் செயலர்/ முதன்மைச் செயலாளர் கோ.பிரகாஷ், முதன்மை செயல் அலுவலர் அ.சிவஞானம், மாநகராட்சி மத்திய வட்டார துணை ஆணையர் எச். ஆர்.கௌஷிக், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கே.எஸ்.ரவிச்சந்திரன், சிஎம்டிஏ கண்காணிப்புப் பொறியாளர் ராஜன்பாபு. உள்ளாட்சிப் பிரதிநிதிகள் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.

காஞ்சிபுரம் மாவட்ட ஊராட்சி குழு தலைவர் படப்பை ஆ.மனோகரன், ஆலந்தூர் தொகுதி பார்வையாளர் சீ.பத்மப்பிரியா பங்கேற்பு!

அமைச்சர் தா.மோ. அன்பரசன் நலத்திட்ட உதவிகள் வழங்குகிறார்!

குன்றத்தூர் வடக்கு ஒன்றிய கழக செயலாளர் ஏ.வந்தேமாதரம் அறிக்கை!

காஞ்சிபுரம், ஜன.27-

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் குன்றத்தூர் வடக்கு ஒன்றியம் கொளப்பாக்கம் ஊராட்சி அண்ணா தெருவில் திராவிட பொங்கலை முன்னிட்டு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா இன்று 27.01.2026 செவ்வாய் கிழமை மாலை 05.00 மணியளவில் குன்றத்தூர் வடக்கு ஒன்றிய கழக செயலாளர் ஏ.வந்தேமாதரம் தலைமையில் எஸ்.கே.துளசிங்கம், முனு.ஆதித்தன், துரை பாபு, அப்துல் ஜாபர், எம். ஆர்.நவீன்ராஜ், கோகுல் குமார், மகேஸ்வரி, துரை. சே.பாலா, கோ.வி.சேகர், மோகன் , கார்த்திகேயன், ராஜசேகர், எஸ்.முருகன், எஸ்.ஸ்டிபன், முனு.சீனிவாசன், விசாலாட்சி,

அவர்களின் முன்னிலையில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழக செயலாளரும், மாண்புமிகு அமைச்சர் தா.மோ. அன்பரசன் அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றி நலத்திட்டங்களை வழங்க உள்ளார். இதில் காஞ்சிபுரம் மாவட்ட ஊராட்சி குழு தலைவர் குன்றத்தூர் தெற்கு ஒன்றிய கழக செயலாளர் படப்பை ஆ. மனோகரன், ஆலந்தூர் தொகுதி பார்வையாளர், கழக தகவல் தொழில் நுட்ப அணி துணை செயலாளர் சீ.பத்மபிரியா, குன்றத்தூர் ஊராட்சி ஒன்றிய குழு தலைவர் சரஸ்வதி மனோகரன் , குன்றத்தூர் ஊராட்சி ஒன்றிய குழு துணை தலைவர் உமா மகேஸ்வரி வந்தே மாதரம், பொதுக்குழு உறுப்பினர் கே. எத்திராஜ், ஒன்றிய கழக நிர்வாகிகள் பொன்.ஜீவா, கே.வசீகரன், பூங்கொடி அரசு, எஸ்.

ராஜாதேசிங்கு, எஸ்.சந்தானம், எஸ்.கே.துளசிங்கம், மாவட்ட அணியின் நிர்வாகிகள் தி.க. பாஸ்கரன், டி.எஸ். எம்.ஜெயகரன், டி.ஆர்.சாரதி பெரிய நாயகம், தா.அன்பழகன், தமிழரசி சுரேஷ், சையத் சுலைமான், ஆகியார் கலந்து கொள்ள உள்ளனர். எனவே குன்றத்தூர் வடக்கு ஒன்றியத்திற்க் குட்பட்ட அனைத்து கிளைக் கழக நிர்வாகிகளும் இளைஞரணி, மாணவரணி, மகளிர் அணி சேர்ந்த நிர்வாகிகளும் பெருமளவில் கலந்து கொண்டு சிறப்பித்திட வேண்டுமாய் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு குன்றத்தூர் வடக்கு ஒன்றிய கழக செயலாளர் ஏ.வந்தே மாதரம் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

பல்லாவரம் சட்டமன்ற தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூபாய் 75 லட்சத்தில்

புதிய பூங்கா, கண்காணிப்பு கேமராக்கள், அங்கன்வாடி மையம் திறப்பு

இ.கருணாநிதி எம்.எல்.ஏ திறந்து வைத்தார்

பல்லாவரம் டிச 27

பல்லாவரம் சட்டமன்ற தொகுதி புனித தோமையார் மலை ஒன்றியம் பொழிச்சலூர் ஊராட்சிக்கு உட்பட்ட பவானி நகர் பகுதியில் புதிய பூங்கா அமைத்து தர வேண்டும் என அப்பகுதி பொதுமக்கள் சார்பில் சட்டமன்ற உறுப்பினரிடம் கோரிக்கை விடுத்தனர்.

இந்த கோரிக்கையை ஏற்று ரூபாய் 25 லட்சம் மதிப்பீட்டில் புதிய பூங்கா அமைக்கும் பணிகள் நடைபெற்றது

இந்நிலையில் அனைத்து பணிகளும் நிறைவடைந்ததை தொடர்ந்து சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி கலந்து கொண்டு பொதுமக்கள் பயன்பாட்டிற்கு பூங்காவை திறந்து வைத்தார்.

இதே போல தாம்பரம் மாநகராட்சி, 2வது மண்டலம், 24வது வார்டு பகுதியை சேர்ந்த பொதுமக்கள் அப்பகுதியில் கண்காணிப்பு கேமராக்கள் அமைத்து தர வேண்டும் எனவும், சிறுவர் பூங்கா, அங்கன்வாடி மையம் புதுப்பித்து தர வேண்டும் எனவும் பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி இடம் கோரிக்கை விடுத்தனர்.

இந்த கோரிக்கைகளை ஏற்று சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி தனது தொகுதி மேம்பாட்டு நிதியில் ரூபாய் 5 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு ஏழு இடங்களில் கண்காணிப்பு கேமராக்களும், சுகுணா காலனி பகுதியில் ரூபாய் 20 லட்சம் மதிப்பீட்டில் சிறுவர் பூங்கா, ரூபாய் 12 லட்சம் மதிப்பீட்டில் அங்கன்வாடி மையம் புதுப்பிக்கும் பணிகள் நடைபெற்றது.

இந்த பணிகள் அனைத்தும் நிறைவடைந்த நிலையில் அவற்றை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

இதில் சட்டமன்ற உறுப்பினர் கருணாநிதி கலந்து கொண்டு பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கண்காணிப்பு கேமராக்கள், சிறுவர் பூங்கா, அங்கன்வாடி மையம் ஆகியவற்றை திறந்து வைத்தார்.

நிகழ்ச்சிகளில் மண்டல் குழு தலைவர் இ.ஜோசப் அண்ணாதுரை, ஊராட்சி மன்ற தலைவர் வனஜா தயாளன், பகுதி செயலாளர் இ.எஸ்.பெர்னார்ட், துணைத் தலைவர் ஜோசப், மாமன்ற உறுப்பினர் கீதா , வட்டச் செயலாளர் நாகராஜன், ஊராட்சி செயலர் சங்கர், ஊராட்சி மன்ற உறுப்பினர்கள்கழக நிர்வாகிகள் நல்வாழ்வு சங்க நிர்வாகிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டு கழகத்தில் நடைபெற்ற 77வது குடியரசு தின விழாவில் வாரியத் தலைவர் துறைமுகம் காஜா இந்திய திருநாட்டின் தேசிய கொடியை ஏற்றினார். இவ்விழாவில் அதிகாரிகள், பணியாளர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

கும்மிடிப்பூண்டி தொகுதி, கவரைப்பேட்டை அரசு மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற குடியரசு தின விழாவில் தலைமை செயற்குழு உறுப்பினரும், கும்மிடிப்பூண்டி உறுப்பினருமான டி.ஜெ.கோவிந்தராஜன் சிறப்புரையாற்றினர். உடன் மோ.மோகன்பிரசாத், கே.வி. உமாமகேஷ்வரி, சட்டமன்ற கொடியேற்றி கே.ஜி.நமச்சிவாயம், பிரபாகரன், ரவி, கே.வி.குமார், கிருபாகரன், அம்பேத்கர்நடராஜன், பா.ஆனந்தராஜ் உள்ளிட்டோர் பங்கேற்றனர். குமாரி ஆகியோர் கலந்து கொண்டனர்.

சர்வதேச விமான நிலையமாக மாற்றுவதற்கான நடவடிக்கையாக

மதுரை விமான நிலையத்தில் ஓடுதளம் விரிவாக்கப் பணி!

சட்டப்பேரவையில் அமைச்சர் எ.வ.வேலு பதில்!

சென்னை, ஜன. 27-

மதுரை விமான நிலையத்தை சர்வதேச விமான நிலையமாக மாற்றுவதற்கான நடவடிக்கையாக ஓடுதளம் விரிவாக்கப் பணி குறித்து சட்டப்பேரவையில் அமைச்சர் எ.வ.வேலு பதிலளித்தார்.

இது குறித்து சட்டப்பேரவையில் நடைபெற்ற விவாதம் வருமாறு:-



கோ.தளபதி: மதுரை விமான நிலையத்தை சர்வதேச விமான நிலையமாக மாற்றுவதற்கான நடவடிக்கையாக ஓடுதளம் விரிவாக்கப் பணிக்காக, தூத்துக்குடி, கன்னியாகுமரி சாலையினை, மைசூர், வாரணாசி போன்ற இடங்களில் உள்ள underpass திட்டத்தினை மதுரையிலும் நிறைவேற்றினால் தென் மாவட்ட போக்குவரத்திற்கு பயனுள்ளதாக இருக்கும் என்பதால் அமைச்சர் அவர்கள் underpass திட்டம் நிறைவேற ஒன்றிய அரசை வலியுறுத்தி உடனடியாக செய்து தருவாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

அமைச்சர் எ.வ.வேலு: நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் கோ.தளபதி அவர்களுக்கே தெரியும். Underpass போடுவது என்று முடிவு செய்யப்பட்டு, திட்ட அறிக்கையெல்லாம் தயார் செய்து, அதற்கு வேண்டிய பணிகளை நெடுஞ்சாலைத் துறை மேற்கொண்டது. ஒன்றிய அரசாங்கம் அதை மறுத்து விட்டது. கீழே underpass அமைக்கப்படும்போது மேலே விமான ஓடுதளம் அமைக்க முடியாது என்று NOC கொடுக்கவில்லை. அதனால்தான் இப்போது ஒரு மாற்றுப்பாதை ஏற்பாடு செய்வதென்று முடிவு செய்யப்பட்டு, மாற்றுப்பாதைக்கான ஏற்பாடுகளை செய்து கொண்டிருக்கிறோம். அதனால் இதற்கும், அதற்கும் சம்பந்தமில்லை. Under passல்தான் கன்னியாகுமரி சாலை அமைக்கப்பட வேண்டுமென்ற அவசியம் கிடையாது. புதிய alignment எடுத்துக்கொண்டிருக்கிறோம். அந்த புதிய alignmentல் அதை அமைக்கலாம். மதுரை விமான நிலையத்தை விரிவாக்கம் செய்வதிலே பல்வேறு நிலைகளிலே மாநில அரசாங்கத்திற்கு பொருளாதார வளர்ச்சி உண்டு. அதனால் மாற்றுப்பாதை அமைப்பதற்கு புதிய alignment பிரகாரம் அந்தப் பாதையை நாங்கள் அமைப்போம்.

பெ. பெரியபுள்ளான் என்கிற செல்வம்: எனது மேலூர் சட்டமன்ற தொகுதி, கொட்டாம்பட்டி, வலைசேரிப்பட்டி விளக்கு மதுரைசென்னை தேசிய நெடுஞ்சாலையில் அடிக்கடி விபத்துகள் நடைபெற்று சுமார் 30க்கும் மேற்பட்ட நபர்கள் இறந்துவிட்டார்கள். எனவே, கொட்டாம்பட்டி, வலைசேரிப்பட்டி விளக்கு தேசிய நெடுஞ்சாலையில் மேம்பாலம் அமைத்துத்தர அரசு முன்வருமா என தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அமைச்சர் எ.வ. வேலு: சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற சாலைகள், தேசிய நெடுஞ்சாலைக்கு சம்பந்தப்பட்ட சாலைகள்தான். பொதுவாக, தமிழ்நாட்டில் எங்கெல்லாம் விபத்து நடைபெறுகிறதோ அங்கெல்லாம் ஒன்றிய அரசாங்கத்தின் மூலமாக IRC guide பிரகாரம் accident black spot என்ற அடிப்படையிலே ஒரு குறிப்பு எடுத்துக்கொண்டிருக்கிறோம். அந்த வகையில் அதுவும் இருக்கிறது. இதுசம்பந்தமாக ஏற்கெனவே இரண்டு முறை ஒன்றிய அரசாங்கத்திற்கு நாங்களே கடிதம் எழுதியிருக்கிறோம். ஏனென்றால், விபத்து பகுதியாக இருக்கின்ற காரணத்தினால் இங்கே ஒரு மேல்மட்ட பாலம் கட்டினால் விபத்தைக் குறைக்கலாம் என்ற அடிப்படையிலே எழுதியிருக்கிறோம். சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் கேள்வியை மையப்படுத்தி மூன்றாவது தாக்கீதாக ஒன்றிய அரசாங்கத்திற்கு கடிதத்தை வலியுறுத்தி அங்கே மேம்பாலம் கட்டுவதற்கு இந்த அரசு முயற்சிக்கும்.

வி.வி.ராஜன் செல்லப்பா: மதுரை, மிக முக்கிய சாலையாக கருதப்படுகிற இராமேஸ்வரம்-மதுரை தெப்பக்குளத்தை இணைக்கிற சாலை, விமான நிலை யத்திற்கு செல்கிற சாலை, பாண்டியூரிலிருந்து செல்கின்ற விரகலூர் roundtana என்று புகழ்பெற்ற அந்த roundtana அனைவரும் கடந்து செல்கின்ற பாதை அது. அந்தப் பாதையில் உயர்மட்ட பாலம் அமைக்க வேண்டுமென்று நீண்டநாள் கோரிக்கை. திருப்பரங்குன்றம் தொகுதியைச் சார்ந்த அந்த roundtana அருகே உயர்மட்ட பாலம் அமைத்தால், வைகை வடகரை சாலை, வைகை கரையோர சாலையும் வந்து அதனுடன் இணைகிறது.

ஆகவே, அந்த roundtanaல் உயர்மட்ட பாலம் அமைக்க வேண்டுமென்ற வினாவுடன், ஏற்கெனவே முன்னாள் நிதியமைச்சர் அவர்கள் அந்த அறிக்கையினை கொடுத்திருக்கிறார்கள். roundtana பகுதியில் உயர்மட்ட பாலம் அமைக்கப்படும் என்றும் வில்பேட்டையிலிருந்து அவனியாபுரம் bypass சாலை வரை உயர்மட்ட பாலம் அமைக்கப்படும் என்றும் ஏற்கெனவே முன்னாள் நிதிய மைச்சர் அவர்கள். (குறுக்கீடு)

ஆகவே, அந்த இரண்டு பாலங்களும் கட்டப்படுமா? ஏனென்றால், அதை தவிர்த்துவிட்டார்கள் என்று செய்தி வருகிறது. அதிகாரிகள் அதற்கு வசதியில்லையென்று திரும்ப அனுப்பிவிட்டதாக தெரிகிறது. ஆகவே, மதுரை மக்களுக்கும், சுற்றுலா பயணிகளுக்கும் வசதியாக அமைச்சர் அவர்கள் அந்த இரண்டு உயர்மட்ட பாலங்களையும் கட்டி தருவாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

அமைச்சர் எ.வ.வேலு: நம்முடைய சகோதரர், சட்டமன்ற உறுப்பினர் ராஜன் செல்லப்பா அவர்கள் சொல்வதை நானும் அறிவேன். அது முக்கியமானதுதான். இந்த ஆண்டு நிதிநிலையில் அதை எடுத்துக்கொள்ளலாம் என்றுகூட சம்பந்தப்பட்ட கண்காணிப்புப் பொறியாளர், கோட்டப் பொறியாளரிடத்திலே அதற்கு வேண்டிய ஆய்வை நான் மேற்கொண்டேன்.

அடுத்தாண்டு இதற்கு ஒரு முன்னுரிமை அளிக்கப்பட்டு, ஏனென்றால், அதற்கு வேண்டிய கோப்புகள் எல்லாம் தயார் செய்துகொண்டு தான் இருக்கிறோம். எனவே, அடுத்தாண்டு இதற்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

காதர்பாட்சா முத்துராமலிங்கம்: இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெறும் அனைத்து ஆய்வுக் கூட்டங்களும் மிகப் பழமையான கட்டடத்தில் உள்ள கூட்ட அரங்கில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஆகவே, புதிய பல் நோக்கு கூட்ட அரங்கம்multi purpose hall கட்டித் தர அரசு ஆவன செய்யுமா என்பதை பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக நான் அறிய விரும்புவதோடு, ஒரு வரலாற்று நிகழ்வினை நான் பதிவு செய்ய வேண்டுமென்று நினைக்கின்றேன்.

நாடு சுதந்திரம் அடைவதற்கு முன்னால் 1914-ஆம் ஆண்டு கிழக்கிந்திய கம்பெனி ஆட்சி செய்கிறபொழுது பாம்பன் கால்வாய் இலங்கைக்கு செல்வதற்காக மீனவர் பயன்பாட்டிற்காக உருவாக்கினார்கள். ஏறத்தாழ தமிழ்நாடு பாரம்பரிய மீனவர்களுடைய நீண்ட நாள் கோரிக்கை. இரண்டு இலட்சம் மீனவர்களுடைய கோரிக்கையை நம்முடைய திராவிட மாடல் முதலமைச்சர் அவர்கள் உத்தரவின் பேரில் நம்முடைய பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்கள் அந்த பாம்பன் கால்வாயைத் தூர்வாருவதற்காக ரூ.30 கோடி மதிப்பீட்டிலே நிருவாக அனுமதி தந்து, தற்போது அந்த பாரம்பரிய மீனவர்களுடைய வாழ்வாதாரத்தை உறுதி செய்ததற்காக நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்கும், நம்முடைய பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) என் நெஞ்சார்ந்த நன்றியை மீனவர்கள் சார்பாக தெரிவித்து, விடை பெறுகிறேன்.

அமைச்சர் எ.வ.வேலு: இந்த கூட்ட அரங்கம் என்பது பொதுமக்கள் வந்து மனுக்கள் கொடுத்து, மாவட்ட ஆட்சித் தலைவர்கள் திங்கள் கிழமைகளிலே மனுக்களைப் பெற்று அவர்களுக்கு உரிய ஆணைகளை பிறப்பிப்பதுதான் அந்த கூட்ட அரங்க அமைப்பினுடைய concept. திங்கள்கிழமை மக்கள் குறை தீர்க்கும் நாள் Monday Grievance Day Petition என்ற அடிப்படையில் மக்கள் கூட்டம் அதிகமாக கூடுகிற பழைய Collector Office எல்லாம் போதுமான அளவிற்கு இடமில்லை என்கிற காரணத்தினால், இந்த ஆட்சி பொறுப்பேற்றவுடனேயே பல்வேறு மாவட்டங்களுக்கு ஒன்றன்பின் ஒன்றாக கட்டிக் கொண்டிருக்கிறோம். ஒன்றுபட்ட இராமநாதபுரம் மாவட்டத்திலிருந்து பிரிக்கப்பட்ட விருதுநகர் மாவட்டத்தில் இப்போது அருமையாக கட்டி இருக்கிறோம். நிதியமைச்சர் அவர்கள் பார்க்கிறார்கள். நம்மிடமிருந்து பிரிந்து சென்ற விருதுநகர் மாவட்டத்தில் அழகாக ஒரு அரங்கம் கட்டி இருக்கிறது என்று அவர் நினை க்கிறார். நாம்தான் தாய் மாவட்டம் ஆயிற்றே என்ற ஓர் எண்ணம் இருக்கிறது. ஆனால், சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்கு சொல்ல விரும்புவது, பொதுப் பணித் துறையை பொறுத்தளவிற்கு பல்வேறு துறைகளின் சார்பாக பணத்தைக் கொடுத்து கட்டுங்கள் என்று சொன்னால் கட்டுவதுதான் எங்கள் வேலை. ஆனால், அது வருவாய்த் துறை சம்பந்தப்பட்டது.

எனவே, விருதுநகர் மாவட்டத்தைச் சார்ந்தவர் தான் வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள். உங்களுக்கு மிக வேண்டியவர். அவர்கள் மூலமாக நீங்கள் மனு கொடுத்து Revenue Departmentலிருந்து அந்த கோப்புகள் நிதித் துறைக்குச் சென்று, நிதித் துறையால் அனுமதிக்கப்பட்டு அந்த கூட்ட அரங்கத்திற்கு பணம் ஒதுக்கப்படுமேயானால் உடனே சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் சொல்வதை இந்த பொதுப் பணித் துறை செய்யும். அதனால், நானும் நம்முடைய வருவாய்த் துறை அமைச்சர் அவர்களிடத்திலே சொல்கிறேன். நீங்களும் அவர்களிடத்திலே ஒரு மனு கொடுத்து அதற்கு அழுத்தம் தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

இ.கருணாநிதி: பல்லாவரம் தொகுதி, பம்மல், அனகாபுத்தூர், குன்றத்தூர் சாலை அகலப்படுத்துகின்ற பணிக்காக கடந்தாண்டு நம்முடைய அமைச்சர் அவர்கள் பார்வையிட்டு சென்றிருக்கிறார்கள். ஆக, அந்தத் துறையின் அமைச்சர், அதிகாரிகளோடு பார்வையிட்ட பிறகு அதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஆக, இந்த தடவையாவது தாங்கள் மனது வைத்து, இந்த அரசு அந்த போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க 4 வழிச் சாலைக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

அமைச்சர் எ.வ.வேலு: ராதாநகர் பகுதியில் underpass அமைத்தது பற்றி ஏதோ நன்றி சொல்வார் என்பதற்காக உறுப்பினர் கருணாநிதி அவர்கள் எழுந்திருக்கிறார் என்று பார்த்தேன். ஏனென்றால், அது ரொம்ப நாள் கிடப்பில் இருந்தது. அதை இந்த ஆட்சி வந்தவுடன் தான் செய்து முடித்தோம். இப்போது அவர் சொல்கிற அந்த 4 வழிச் சாலை பல்லாவரத்திலிருந்து குன்றத்தூர் செல்கிற சாலை அந்த சாலை. அதை நேரடியாகவே ஏற்கெனவே நம்முடைய அமைச்சர் தா.மோ.அன்பரசன் அவர்களும் இது சம்பந்தமாக என்னிடத்தில் பல முறை வலியுறுத்தி இருக்கிறார்கள். அந்த அடிப்படையில் சென்ற 6 மாதங்களுக்கு முன்னால், உறுப்பினர் கருணாநிதி அவர்களும், அதே போன்று, அமைச்சர் தா.மோ.அன்பரசன் அவர்களும் அந்தச் சாலையை நாங்கள் நேரடியாக ஆய்வு செய்தோம். அதில் இப்போது முதலமைச்சர் சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தில் முதற்கட்டமாக பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. எஞ்சியிருக்கிற 1½ கிலோ மீட்டர் கூட இந்த நிதியாண்டிலேயே செய்வதற்கு வேண்டிய நிதிகள் ஒதுக்கப்பட்டு அந்த பணிகளில் ஈடுபட்டிருக்கிறோம்.

அதை முழுமையாக முடிக்க வேண்டுமென்று சொன்னால், அடுத்த நிதியாண்டில்தான் பணம் முதலமைச்சர் அவர்களிடத்திலே பெற்று முடிக்க முடியும். அதனால், இரண்டு கட்டங்களை இந்த நிதியாண்டிலே முடித்து விடுகிறோம். மூன்றாவது கட்டம், அடுத்த நிதியாண்டிலே கட்டாயம் செய்து தரப்படும்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

கடலூர் மேற்கு மாவட்டம், நல்லூர் வடக்கு ஒன்றியம் பூலாம்பாடி அரசு மேல்நிலைப் பள்ளியில் 77 வது குடியரசு தினத்தை முன்னிட்டு தேசிய கொடி ஏற்றி இனிப்பு வழங்கப்பட்டது. துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு கடலூர் மேற்கு மாவட்டச் செயலாளர் – தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி.கணேசன் ஆலோசனைப்படி 2024–2025 ஆண்டுக்கான 12ஆம் வகுப்பு, 11 ஆம் வகுப்பு, 10 ஆம் வகுப்பு ஆகிய வகுப்புகளுக்கான பொதுத் தேர்வில் முதலிடம், இரண்டாமிடம், மூன்றாமிடம் பிடித்த மாணவ மாணவியர்களுக்கு பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவர், பூலாம்பாடி முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர், நல்லூர் வடக்கு ஒன்றியக் கழக துணைச் செயலாளர் டி.அண்ணாதுரை மாணவ மாணவியர்களை கௌரவித்து, பணமுடிப்பு வழங்கி வாழ்த்தினார்.